1977 ஜூலை 15] [திரு. ஆர். உமாநாத்]

1975 ஏப்ரல் மாதத்தில் இருக்கக்கூடிய ஓர்க் லோடு—எஸ். என். நாராயணன் எதிர்த்த ஓர்க் லோடு அல்லது செப்டம்பர் 1975-ல் சம்பளம் ஒப்பந்தம் செய்யும்போது இருந்த ஒரு ஓர்க் லோடு, அல்லது 1975-ம் ஆண்டு சராசரி ஓர்க் லோடு இந்த மூன்றில் ஏதாவது ஒரு முறையில் ஓர்க் லோடை நிர்ணயிக்க வேண்டும். லேபர் ரெப்ரசன்டேஷன் வைத்து யாரையும் பழி வாங்கக்கூடாது என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இந்தக் கருத்தை மனதில் வைத்து முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தைகளை நடத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்தன் அவர்கள் எழுதிய கடிதத்தின்படி 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத ப்ரொடக்ஷன் அல்லது 1975 ஆம் ஆண்டு 12 மாதங்கள் சராசரி ப்ரொடக்ஷனை இலக்காக வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாத ப்ரொடக்ஷனை இலக்காக வைத்துக் கொள்ளுவது நல்லது என்கிறார்கள்.

இவைகளைப் பற்றியெல்லாம் விவாதித்து இருசாராரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே சிறப்பான முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அப்படி ஒரு முடிவை எடுக்க முதலமைச்சர் அவர்களே பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் நிச்சயம் நல்ல முடிவு ஏற்படும். அண்ணா அவர்கள் சொன்னது போல் "ஹேஸன் ஸ்லோலி" என்ற முறையில் செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

உரிமைப் பிரச்னைகள் சிலவற்றின் மீதான தீர்ப்புகள் ஒத்தி வைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மெயில் பத்திரிகை, மாலை முரசு, மற்றும் முரசொலி ஆகிய பத்திரிகைகளுக்கு விளக்கம் கேட்டு எழுதியிருந்தோம். மெயில் பத்திரிகை மட்டும் விளக்கம்

அளித்திருக்கிறது. மற்ற இரு பத்திரிகைகளும் அவகாசம் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, 20—7—1977 வரை அவற்றுக்கு அவகாசம் கொடுத்துவிட்டு, இவற்றின் மீது எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் தீர்மானத்தின் மீதும் எனது தீர்ப்பை அடுத்த கூட்டத் தொடரில் அறிவிக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"சட்டமன்றப் பேரவையின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) கவன ஈர்ப்பு

(அ) மூன்றாவது ஊதியக்குழு அமைப்பது குறித்து

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

"மூன்றாவது ஊதியக் குழு அமைப்பதாக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றாவிடில் நேரடி நடவடிக்கையாக மீண்டும் கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அரசு ஊழியர்கள் கொடுத்துள்ள இறுதி எச்சரிக்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து" என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.